நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026ம் ஆண்டு ஜீன் மாதம் 22ம் நாள் திங்கள்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு. 485/2026**

சுடர்மணி ... மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்

/எதிரிடை/

அரசுக்காக ஆய்வாளர்
திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய
குற்ற எண்.214/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 04.06.2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 04.06.2026ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 22.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சத்திராஜன், B.A., B.L, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி MBA., BL., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503ன்– கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் PR.No.256/2026–ல் வழக்கு சொத்து மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இம்மனுவின் மனுதாரர்/ சொத்தின் உரிமையாளர் என்றும், கடந்த 31.03.2026 ம் தேதியன்று தான் வேலைக்கு சென்றுவிட்டு தனது இருசக்கர வாகனமான TN 84 W 7004 என்ற Hero Splendor ஐ தனது வீட்டின் முன் நிறுத்துவதற்கு இடம் இல்லாததால் தனது வீட்டின் ஓனரரான மாட்டு மந்தை வீதியில் குடியிருந்தவ ரும் ஜெயபாண்டியன் வீட்டின் முன்பு நிறுத்தி பூட்டிவிட்டு தனது வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், மறுநாள் 01.04.2026ம் தேதியன்று காலையில் வந்து தான் பார்க்கும் பொழுது தனது வாகனத்தை காணவில்லை என்றும், இது சம்பந்தமாக தான் திருத்தங்கல் காவல் நிலையத்தில் உடனடியாக வாய்மொழியாக புகார் தெரிவித்ததாகவும், அதன் பின்பு கடந்த 30.04.2026ம் தேதியன்று தான் கொடுத்த புகாரில் முதல் த கவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், இந்நிலையில் நகர் காவல் நிலையத்தலிருந்து தனக்கு போன் மூலம் தகவல் வந்ததாகவும், அதன் படி தனது வாகனத்தை

பயன்படுத்தி வழிபறியில் ஒரு நபர் ஈடுபட்டதாகவும், அந்த வாகனத்தின் பதிவு எண்.TN 95 F 2061 என்று போலியாக நம்பர் பிளேட் தயார் செய்யப்பட்டதாகவும், வண்டியின் Chase No மற்றும் Engine No யை பார்த்த போது அது உங்களுடைய வானம் என்று தெரியவருவதாகவும் கூறினார்கள் என்றும், உடனே தான் அவர்களிடம் தனது வாகனம் திருடு போனது சம்மந்தமாகவும், அது சம்பந்தமாக திருத்தங்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக கூறியதாகவும், அவர்கள் கூறிய Engine No.HA10ERGHG77755 என்பதும், Chase No.MBLHA10CGGhG என்பதும் தனது வாகனமான TN 84 W 7004 என்ற வாகனத்திற்கு உரியதாகும் என்றும், தனது வாகனத்தின் நம்பர் பிளேட்டை மாத்தி போலி நம்பருடன் தனது வானத்தை மேற்படி வழக்கில் எதிரி தன்னிடமிருந்து திருடி பயன்படுத்தியுள்ளார் என்றும், மேற்வடி வாகனம் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் எந்தவித பாதுகாப்பற்ற நிலையில் இருந்து வருவதால் முழுமையாக பயன்படுத்த முடியாத நிலைக்குப் போய்விடும் என்றும், மேற்படி வாகனத்தை பயன்படுத்தாமல் இருந்தால் அதன்மதிப்பு குறைந்துவிடும் என்பதால், மேற்படி வழக்கு சொத்தான நான்குசக்கர வாகனத்தை இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்துக்களை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் அவர் அதனை விற்று பணமாக மாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், உருமாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், மேற்படி வழக்கு சொத்துக்களை வழக்கு விசாரணையின் போது ஆஜர் செய்யாமல் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அட்டை நகல், ஆர்.சி.புத்தகத்தின் நகல், ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் TN 95 F 2061 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.256/2026 கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் விசாரணைக்கு பின்னர் மேற்படி வாகனத்தின் அசல் பதிவெண் TN 84 W 7004 என்று குற்றமுறையீட்டாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு TN 95 F 2061 என்று போலியாக நம்பர் பிளேட் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் வண்டியின் Engine No.HA10ERGHG77755 மற்றும் Chase No.MBLHA10CGGhG ஆகியவை மனுதாரரின் திருடு போன வாகனமான TN 84 W 7004 என்ற வாகனத்திற்கு உரியது என்பது தெரியவருவதாக மனுதாரர்

மற்றும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை மற்றும் வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் TN 84 W 7004 என்ற Hero Splendor இருசக்கர வாகனத்திற்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. மேலும் அரசு தரப்பில் மனுதாரர் தான் மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்பது குறித்து ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. மேலும் வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகமும் மனுதாரர் வசம் தான் உள்ளது. மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார். வழக்கு சொத்தை உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அதன் பயன்பாடும், மதிப்பும் குறைந்து விட வாய்ப்பும் உள்ளது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் –எதிர்– குஜராத் மாநிலம் 2002 (10) SCC 283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.70,000/–க்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்தை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமானங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63–ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்தை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6.TN 84 W 7004 என்ற Hero Splendor வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜீன் திங்கள் 22ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2
திருவில்லிபுத்தூர்.